சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. C. ராஜேஷ், B.A., B.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

**<u>அசல் வழக்கு எண்.103/2024</u>**

வாதி தரப்பு சாட்சி வா.சா.3 ன் வாக்குமூலம் 1875 ம் ஆண்டில் 10 வது பிரிவின் கீழ் விசாரிக்கப்பட்டு திருமதி. B. மகாலெட்சுமி, பெஞ்ச் கிளார்க் நிலை 2 என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் வாங்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| பெயர்: | திரு. முத்து | த/பெ: நாகரெத்தினம் |
| வயது: | | ஊர் : |
| தொழில்: | | முகவரி: |
| தேதி: | 11.08.2026 | தாலுக்கா: |

<u>முதல் விசாரணை...</u>

நான் தற்சமயம் புதுப்பத்தூர் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வருகிறேன். இவ்வழக்கில் சாட்சி சொல்ல அழைப்பாணை வந்தது. சர்வே எண். 220/4 க்கான 1434 ஆம் பசலிக்கான **அடங்கல் கணக்கு சா.சா.ஆ.1** ஆகும். 1435 ஆம் பசலிக்கான அடங்கல் கணக்கை நான் வழங்கியுள்ளேன் அது **சா.சா.ஆ.2** ஆகும். சர்வே எண்.221/14, 222/8, 224/17, 220/4 ஆகியவற்றிற்கான கிராம நிர்வாக அலுவலர் சான்று **சா.சா.ஆ.3** ஆகும். சர்வே எண்.167/1 எ, 167/2 எ, 166/3 எ, 222/8, 224/17, 220/5 சி 220/4 ஆகியவற்றிற்கான கிராம நிர்வாக அலுவலர் சான்று **சா.சா.ஆ.4** ஆகும்.

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. நான் தாவா கிராமத்தில் எப்போது பணியில் சேர்ந்தேன் என்றால் 2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் சேர்ந்தேன். சா.சா.ஆ.1 ஆவணம் 2024 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் ஏற்பட்டுள்ளது. செப்டம்பர் மாதம் விளைச்சல் பதிவு செய்துள்ளார். சா.சா.ஆ.1 ஆவணத்தை நான் வழங்கவில்லை. அதில் கண்டுள்ள விவரங்களை பற்றி எனக்கு சொல்ல தெரியாது என்றால் சரிதான். 2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திற்கு சா.சா.ஆ.2 ஆவணத்தை கொடுத்தேன். எதற்காக

அந்த ஆவணத்தை கொடுத்தேன் என்றால் பயிர்காப்பீட்டு திட்டத்திற்காக கொடுத்தேன்.

2. பட்டா யார் பெயரில் உள்ளதோ அவர்கள் பெயரில்தான் அடங்கல் வழங்குவோம் என்றால் சரியல்ல. சா.சா.ஆ.2 ல் சர்வே எண்.222/8 ல் அடங்கியுள்ள 0.12.5 ஏர்ஸ்க்கு மட்டும் அழகுசுந்தரநாதன் பெயரில் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.222/8 ல் அழகுசுந்தரநாதன் சாகுபடி செய்ததாக கணக்கு எழுதியுள்ளேன் என்றால் சரிதான். என்ன நெல் சாகுபடி செய்திருந்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எந்த மாதம் அறுவடை செய்தார்கள் என்றால் இரண்டாவது மாதம் அறுவடை செய்திருக்கவேண்டும்.

3. அறுவடை மாதம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சா.சா.ஆ.2 ல் அறுவடை காலம் பூர்த்தி செய்யப்படவில்லை என்றால் சரிதான். அது இரண்டாவது போகத்திற்கு உரியது. எவ்வளவு சாகுபடி பரப்பு என்ற காலமும் பூர்த்தி செய்யப்படவில்லை என்றால் சரிதான். சா.சா.ஆ.2 ஐ 2025 ஆம் ஆண்டுநவம்பர் மாதத்தில் கொடுத்தேன். 1435 ஆம் பசலி முடிவு காலம் மார்ச் 31 ஆகும். பசலி ஆண்டு ஜுலை 1 முதல் ஜுன் 30 வரை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 1435 ஆம் பசலியின் முடிவு காலம் 2026 ஆண்டு மார்ச் 31 ஆகும். ஆனால் சா.சா.ஆ.2 ஆவணம் 2025 ஆம் ஆண்டே கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது பிழையாக கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

4. ஒவ்வொரு ஆண்டும் வருவாய் கோட்டாட்சியர் மூலம் ஆவண பரிசீலனை செய்வது ஜமாபந்தி ஆகும். 1435 ஆம் பசலிக்கான ஜமாபந்தி 2026 ஆம் ஆண்டு மே மாதத்தில் நடந்தது என்றால் சரிதான். அந்த ஜமாபந்தியில்தான் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது என்றால் சரிதான். ஆவணங்கள் பரிசீலனைக்கு வருவதற்கு பல மாதங்களுக்கு முன்பே சா.சா.ஆ.2 கொடுக்கப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. சர்வே எண்.222/8 ல் துரை என்பவர் சாகுபடியில் இருந்துவந்ததாக சா.சா.ஆ.3 மற்றும் சா.சா.ஆ.4 ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணங்களில் உண்மையான சாகுபடிதாரர் பெயர் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

5. சா.சா.ஆ.4 நான் வழங்கியது. சா.சா.ஆ.3 - ஐ நான் வழங்கவில்லை. சாகுபடி செய்யாத நபர்கள் பெயரில் எதற்காக சான்று வழங்கியுள்ளேன் என்றால் அந்த நிலங்களில் புகழ்மணி என்பவர் சாகுபடி செய்துவருகிறார். அழகுசுந்தரநாதன்

மற்றும் பாலதண்டாயுதபாணி ஆகியோர் சாகுபடி செய்யவில்லை என்றால் சரிதான். மேற்கண்ட புகழ்மணி என்பவர் பெயர் சா.சா.ஆ.1 மற்றும் சா.சா.ஆ.2 ல் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனது சொந்த ஊர் வைப்பூர் ஆகும். தாவா சொத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றும் அலுவலகத்தில் இருந்தபடியே உண்மையான சாகுபடிதாரரை தெரிந்து கொள்ளாமல் சா.சா.ஆ.3 மற்றும் சா.சா.ஆ.4 வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சா.சா.ஆ.3 மற்றும் சா.சா.ஆ.4 ஆகியவை பயிர்காப்பீட்டுக்கு வழங்கப்பட்டது என்றால் சரிதான். பாலதண்டாயுதபாணியின் வீட்டின்கதவு எண் தெரியாது.

6. பாலதண்டாயுதபாணி வசித்து வரும் இடத்தின் புல எண்.224/14 ஆகும். தாவா புல எண்கள் எதுவும் பாலதண்டாயுதபாணி அனுபவத்தில் இல்லை என்றால் சர்வே எண்.221/14 ஐ தவிர இதர இடங்கள் பாலதண்டாயுதபாணியின் அனுபவத்தில் இல்லை. தாவா சொத்தை பற்றி எதுவும் தெரியாமல் ஆவணங்களுக்கு விரோதமாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. அழகுசுந்தரநாதன் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு முன்பு மனு எழுதும் தொழில் செய்துவருகிறார் என்றால் சரிதான். நான் அடிக்கடி திருவாரூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு பணிநிமித்தமாக வருவேன். அந்த வகையில் அழகுசுந்தரநாதன் எனக்கு நெருக்கமான நண்பர் என்பதால் ஆவணங்களுக்கு விரோதமாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

C RAJESH

Digitally signed by C RAJESH
Date: 2026.08.11 16:16:34 +0530

Subordinate Judge,
Tiruvarur.